குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்: விரைவு நீதிமன்றங்கள் 850-ஆக அதிகரிப்பு

புது தில்லி, நவ. 4: நாட்டில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை 779-இல் இருந்து 850-ஆக அதிகரிக்கவும், இந்த நீதிமன்றங்களை வலுப்படுத்தவும் மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியது.

உச்சநீதிமன்றஉத்தரவின்படி,குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கும் திட்டம் கடந்த 2019-இல் தொடங்கப்பட்டது. இதுவரை அமைக்கப்பட்ட சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் மூலம் பாலியல் வன்கொடுமை வழக்குகள் மற்றும் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின்கீழ் (போக்ஸோ) தொடரப்பட்ட வழக்குகள் என 4 லட்சத்துக்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை 2031, மார்ச் மாதம் வரை நீட்டிக்கவும், விரைவு நீதிமன்றங்களின் எண்ணிக்கையை தற்போதுள்ள 799-இல் இருந்து 850-ஆக அதிகரிக்கவும் பிரதமர் மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கடுமையாக கையாள மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது. அதன்படி, சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் திட்டத்தை ரூ.3,788 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் 2031-ஆம் ஆண்டு வரை தொடர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ரூ.2,353 கோடியை நிர்பயா நிதியில் இருந்து மத்திய அரசு வழங்கும். மீதமுள்ள தொகை, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளால் பங்களிக்கப்படும். திட்டத்தின் திறன்மிக்க அமலாக்கத்தை மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து மத்திய சட்ட அமைச்சகத்தின் நீதித் துறை கண்காணிக்கும் என்றார்.

மத்திய அமைச்சரவை ஒப்புதல்



மத்திய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து தில்லியில் செய்தியாளர்களுக்கு புதன்கிழமை பேட்டியளித்த மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ். உடன் முப்படை தலைமைத் தளபதி ஜெனரல் என்.எஸ்.ராஜா சுப்பிரமணி.

மின்னாற்றல் சேமிப்புக்கு ரூ.14,500 கோடி திட்டம்: நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி ஒருங்கிணைப்புக்கு உதவேகமளிக்கும் நோக்கில் பெரிய அளவிலான மின்னாற்றல் சேமிப்புக்கு நிதியளிக்க ரூ.14,500 கோடி மதிப்பீட்டிலான திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.

2030-31-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், மணிக்கு 30 ஜிகாவாட் திறன் கொண்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள், மணிக்கு 60 ஜிகாவாட் திறன்கொண்ட உந்து மின்கல ஆற்றல் சேமிப்புத் திட்டங்கள், மணிக்கு 2 ஜிவாட் திறன்கொண்ட அதிநவீன சேமிப்பு தொழில்நுட்ப திட்டங்களுக்கு நிதி ஆதரவு அளிக்கப்படும் என்று அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புள்ளியியல் அமைப்பு முறையை மேம்படுத்த...: நாட்டின் அதிகாரபூர்வ புள்ளியியல் அமைப்பு முறையை மேம்படுத்த ரூ.4,371 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியது.

'வளர்ந்த இந்தியாவுக்கான புள்ளியியல் மேம்பாடு, பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி (விஸ்தர்) என்ற இத்திட்டம், 2030-31-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும். தரவு துல்லியத்தை உறுதி செய்வதுடன், நாட்டின் ஒட்டுமொத்த புள்ளியியல் அமைப்புமுறையை எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கும்' என்று மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

முக்கியக் கனிமங்களை பிரித்தெடுக்க ரூ.2,814 கோடியில் திட்டம்

உள்நாட்டில் லித்தியம், நிக்கல் ஆகிய முக்கிய கனிமங்களின் பிரித்தெடுத்தலை ஊக்குவிக்க ரூ.2,814 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய மூலதன ஆதரவு திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

2030-31-ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்படி, இரண்டு லித்தியம் பிரித்தெடுத்தல் ஆலைகள், இரண்டு நிக்கல் பிரித்தெடுத்தல் ஆலைகள் என நான்கு ஆலைகள் அமைப்பதற்கான முதலீடுகளில் 30 சதவீதம் வரை மூலதன மானியம் வழங்கப்படும். லித்தியம் ஆலைக்கு அதிகபட்சமாக ரூ.500 கோடி வரையும், நிக்கல் ஆலைக்கு ரூ.900 கோடி வரையும் நிதி ஆதரவு அளிக்கப்படும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, தேச பாதுகாப்பு மற்றும் நவீன தொழில்நுட்பங்களுக்கு முக்கிய கனிமங்கள் இன்றியமையாதது என்பதைக் கருத்தில் கொண்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

முக்கிய கனிமங்களின் தேவையில் வெளிநாடுகளையே இந்தியா சார்ந்துள்ள நிலையில், மேற்கண்ட திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடியும் வெகுவாக வரவேற்றுள்ளார்.

ADITYA BIRLA CAPITAL

பாதுகாப்பு முதலீடு நிதியுதவி ஆலோசனை

ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் வளாகம், வெராவல், குஜராத்-362266.
கிளை அலுவலகம்: 1/276/2, தரைத்தளம், கந்தஸ்வர்ணா மெகா மால், பிளாக் B, சாரதா கல்லூரிச் சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம்-636016.

பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

2024-ஆம் ஆண்டில் நீங்கள் பெற்ற அனைத்துக் கடன் வசதிகளும் தற்போது ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் (இனி "ABCL" எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. எனவே, இவ்வறிவிப்பு ABCL நிறுவனத்தால் உங்களுக்கு வழங்கப்படுகிறது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரரான நீங்கள், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளீர்கள். கீழே குறிப்பிடப்பட்டுள்ள நீங்கள், கடன் ஒப்பந்தத்திற்குக் கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமின்தாரர் / அடமானதாரராக உள்ளீர்கள். நீங்கள் தவணைகளைச் செலுத்தத் தவறியதன் காரணமாக, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம், 2002 (சுருக்கமாக SARFAESI சட்டம்)-இன் விதிமுறைகளின்படி, உங்கள் கடன் கணக்கு 13.10.2026 அன்று வராக்கடனாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் ஆகிய நாங்கள், SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) உடன் பிரிவு 13(13)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பினை நீங்கள் அளித்த முகவரிக்கு அனுப்பியிருந்தோம். உங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதில் நீங்கள் தவறியுள்ளீர்கள் என்பது மேற்கூறிய அறிவிப்புகளின் உள்ளடக்கமாகும். எனவே, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3(1)-இன் விதிமுறைகளின்படி அறிவிப்பினைச் சார்பு செய்வதற்காக இவ்வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது:

கடன் கணக்கு எண்: கடன்தார(ர்கள்), கூட்டுக் கடன்தார(ர்கள்) மற்றும் அடமானதாரரின் பெயர் மற்றும் முகவரி: கடன் கணக்கு எண்: ABBANTL_000000801410 – 1. M/s சஞ்சீவனி டயபடீஸ் கேர், அதன் உரிமையாளர் திருமதி. செல்வதுரை சண்முக வடிவு மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது, எண் 46, வசந்த் நகர், கிருஷ்ணகிரி பைபாஸ் சாலை, ஒசூர், தமிழ்நாடு-635109. மேலும் முகவரி: எண் 206 A பிளாக், முதல் தளம், பினாக்கிள் அபார்ட்மெண்ட், ரெயின்போ கார்டன், அம்மா மருத்துவமனை எதிரில், ஒசூர், தமிழ்நாடு-635109. **(கடன்தார் / அடமானதாரர்). 2. திருமதி. செல்வதுரை சண்முக வடிவு, சஞ்சீவனி டயபடீஸ் கேர் உரிமையாளர்,** எண் 46, வசந்த் நகர், கிருஷ்ணகிரி பைபாஸ் சாலை, ஒசூர், தமிழ்நாடு-635109. **மேலும் முகவரி:** எண் 206 A பிளாக், முதல் தளம், பினாக்கிள் அபார்ட்மெண்ட், ரெயின்போ கார்டன், அம்மா மருத்துவமனை எதிரில், ஒசூர், தமிழ்நாடு-635109. **மேலும் முகவரி:** எண் 6, ராஜேஸ்வரி நகர், பாகலூர் சாலை, ஒசூர், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு-635109. (கூட்டுக் கடன்தார்). **3. திரு. தினகரன் வெள்ளையன்,** எண் 46, வசந்த் நகர், கிருஷ்ணகிரி பைபாஸ் சாலை, ஒசூர், தமிழ்நாடு-635109. **மேலும் முகவரி:** எண் 206 A பிளாக், முதல் தளம், பினாக்கிள் அபார்ட்மெண்ட், ரெயின்போ கார்டன், அம்மா மருத்துவமனை எதிரில், ஒசூர், தமிழ்நாடு-635109. **மேலும் முகவரி:** எண் 6, ராஜேஸ்வரி நகர், பாகலூர் சாலை, ஒசூர், கிருஷ்ணகிரி, தமிழ்நாடு-635109. (கூட்டுக் கடன்தார் / அடமானதாரர்). மின்னஞ்சல் முகவரி: **dhinaps@gmail.com.** (இனி ஒட்டுமொத்தமாக "கடன்தாரர்கள்" எனக் குறிப்பிடப்படுவார்கள்).

கோரிக்கை அறிவிப்பு நாள்: 27.10.2026

கோரிக்கை அறிவிப்பின்படி செலுத்த வேண்டிய தொகை: ரூ.4,56,20,574.16/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தாறு லட்சத்து இருபதாயிரத்து ஐந்நூற்று எழுபத்துநான்கு மற்றும் பைசா பதினாறு மட்டும்), நிலுவை அசல், பாக்கிகள் (சேர்த்துள்ள தாமதக் கட்டணங்கள் உட்பட) மற்றும் **14.10.2026** வரையிலான வட்டி ஆகிய வகைகளில்.

"அமலாக்கப்படவுள்ள கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள்" "அட்டவணை": திருவண்ணாமலை மாவட்டம், ஒசூர் வட்டம், ஒசூர் நகரம் (வசந்த் நகர்), கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் ஒசூர் சார்பதிவு மாவட்டத்துடன் இணைந்ததும், ஒசூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதுமான நிலம் மற்றும் கட்டடம் முழுவதும். சர்வே எண்கள் 795, 797, 798-இல் உள்ள புஞ்சை நிலங்கள் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அதில் மனை எண் 46 பகுதி, 1147 சதுர அடி பரப்பளவுள்ள நிலத்தின் எல்லைகள்: கிழக்கு: மனை எண் **46A;** மேற்கு: மனை எண் 45; வடக்கு: மனை எண் 46 பகுதி மற்றும் புறம்போக்கு நிலம்; தெற்கு: 25 அடி அகலச் சாலை. மேற்கூறிய எல்லைகளுக்குள் அளவுகள்: கிழக்கு மேற்காக வடபுறம் 37 அடி, கிழக்கு மேற்காகத் தென்புறம் 37 அடி, வடக்கு தெற்காகக் கிழக்குப்புறம் 31 அடி, வடக்கு தெற்காக மேற்குப்புறம் 31 அடி. மொத்தம் 1147 சதுர அடி பரப்பளவுள்ள நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள **RCC** கட்டடமும் உட்பட. மேற்கூறிய மனை சர்வே எண்கள் 795, 797-இல் அடங்கியுள்ளது. இதற்கான பதிய **T.S.** எண்கள் 146, 145, 105, 137, 147, 139, வார்டு **D,** பிளாக் 11.

(இனம் எண் 2, ஒசூர் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 02.04.2004 நாளிட்ட விற்பனை ஆவண எண் 1833/2004-இல் அடங்கிய சொத்து):

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், ஒசூர் நகரம் (வசந்த் நகர்), கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் ஒசூர் சார்பதிவு மாவட்டத்துடன் இணைந்ததும், ஒசூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளதுமான நிலம் மற்றும் கட்டடம் முழுவதும். சர்வே எண் 772/2, புஞ்சை பரப்பளவு ஹெக்டேர் 0.61.5 (அல்லது ஏக்கர் 1.52 சென்ட்), தீர்வை ரூ.3.04np., மேற்கூறிய நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அதில் மனை எண் 7, **2254 சதுர அடி பரப்பளவுள்ள நிலத்தின் எல்லைகள்:** கிழக்கு: சர்வே எண் 772/2-இல் திரு. உகம்ராஜ் சுரானாவுக்குச் சொந்தமான நிலம்; மேற்கு: திரு. ராஜேஷ் கண்ணாவுக்குச் சொந்தமான நிலம்; வடக்கு: **TNHB** நிலம்; தெற்கு: 20 அடி அகலச் சாலை. **மேற்கூறிய எல்லைகளுக்குள் அளவுகள்:** கிழக்கு மேற்காக வடபுறம் 40.6 அடி, கிழக்கு மேற்காகத் தென்புறம் 40 அடி, வடக்கு தெற்காகக் கிழக்குப்புறம் 58 அடி. வடக்கு தெற்காக மேற்குப்புறம் 54 அடி. மொத்தம் 2254 சதுர அடி பரப்பளவுள்ள நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள **RCC** கட்டடமும் உட்பட. மேற்கூறிய சொத்து பதிய **T.S.** எண் 192, வார்டு **D,** பிளாக் 3-இல் அடங்கியுள்ளது.

இவ்வறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்கூறிய தொகையை வட்டி மற்றும் செலவுகளுடன் **ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்** நிறுவனத்திற்குச் செலுத்துமாறு இதன் மூலம் நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். தவறினால், கடன்தாரர்கள், கூட்டுக் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் ஜாமின்தார்ர்களின் கடனீட்டுச் சொத்துக்களைச் சுவாதீனம் எடுத்துக் கொள்வது உட்பட, கடனீட்டுச் சொத்துக்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்கும் எதிராக மேற்கூறிய சட்டத்தின் விதிமுறைகளின்படி **ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்** தேவையான நடவடிக்கை எடுக்கும். மேற்கூறிய சட்டத்தின் கீழ் ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் நிறுவனத்திற்கு உள்ள அதிகாரங்களில் பின்வருவன அடங்கும்: **(a)** கடன்தாரர்களின் கடனீட்டுச் சொத்துக்களைச் சுவாதீனம் எடுத்துக் கொள்ளுதல், கடனீட்டுச் சொத்துக்களைப் பணமாக்குவதற்காகக் குத்தகை, உரிமை ஒப்படைப்பு அல்லது விற்பனை மூலம் மாற்றுவதற்கான உரிமைகள் உட்பட; **(b)** கடன்தாரரின் வணிக நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளுதல், கடனீட்டுச் சொத்தைப் பணமாக்குவதற்காக் குத்தகை, உரிமை ஒப்படைப்பு அல்லது விற்பனை மூலம் மாற்றுவதற்கான உரிமை உட்பட; **(c)** ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தால் சுவாதீனம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை நிர்வகிக்க, எவரையேனும் (இனி மேலாளர் எனக் குறிப்பிடப்படுபவர்) நியமித்தல்; **(d)** கடன்தாரரிடமிருந்து கடனீட்டுச் சொத்துக்களில் ஏதேனும் ஒன்றைப் பெற்றுள்ளவரும், கடன்தாரருக்குப் பணம் செலுத்த வேண்டியவராக உள்ள அல்லது இனிச் செலுத்த வேண்டியவராக ஆகக்கூடியவருமான எவரையும், கடனீட்டுக் கடனைச் செலுத்துவதற்குப் போதுமான அளவிலான தொகையை ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திற்குச் செலுத்துமாறு, எந்த நேரத்திலும் எழுத்துப்பூர்வ அறிவிப்பின் மூலம் கோருதல். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13)-இன் விதிமுறைகளின்படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ளதும் **ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்** நிறுவனத்திடம் அசையும் சொத்து அடமானம் / அடமானம் வைக்கப்பட்டுள்ளதுமான கடனீட்டுச் சொத்துக்கள் எதையும், **ஆதித்யாசி பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்** நிறுவனத்தின் முன் ஒப்புதல் இன்றி, உங்கள் வணிகத்தின் வழக்கமான நடவடிக்கைகள் தவிர, விற்பனை, குத்தகை அல்லது வேறு வகையில் மாற்றுவதற்கு இதன் மூலம் உங்களுக்குத் தடை விதிக்கப்படுகிறது.

இடம் : ஒசூர்
நாள் : 05-11-2026

ஒப்பம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்,
ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்

பிரதமருடன் நேரடி விவாதம் நடத்த தயார்

ராகுல் காந்தி சவால்

சங்ரூர் (பஞ்சாப்), நவ. 4: பிரதமர் தேச துரோகி என்பதையும், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுபவர் என்பதையும் நரேந்திர மோடியுடன் 5 நிமிஷம் நேருக்குநேர் விவாதம் நடத்தினால் நிரூபித்துக் காட்டுவேன் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி சவால் விடுத்துள்ளார்.



ஆம் ஆத்மி ஆட்சியில் உள்ள பஞ்சாபில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் தனது தேர்தல் பிரசாரத்தை புதன்கிழமை தொடங்கியது. இதற்காக, சங்ரூர் பகுதியில் நீதிக்கான பொதுக் கூட்டம் என்ற பெயரில் பிரம்மாண்ட கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, பஞ்சாப் காங்கிரஸ் பொறுப்பாளர் சச்சின் பைலட், மாநில காங்கிரஸ் தலைவர் பர்கத் சிங் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் ராகுல் காந்தி பேசியதாவது:

பஞ்சாபில் போதைப்பொருள் கடத்தலும், பயன்பாடும் பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சாபில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்து வருவதாக கூறியிருந்தேன். அப்போது பாஜகவும், சிரோமணி அகாலி தளமும், ராகுல் காந்திக்கு பஞ்சாபைப் பற்றி எதுவும் தெரியாது என்று கூறி, போதைப்பொருள் பிரச்னையைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

தில்லியில் இருந்து பஞ்சாபை இயக்கும் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி இனி தேவையில்லை. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், போதைப்பொருள் இல்லாத பஞ்சாபை உருவாக்கவும் காங்கிரஸுக்கு வாக்களிக்க வேண்டும்.

பிரதமருடன் நேரடி விவாதம் நடத்த தயாராக இருக்கிறேன். நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று அவர்கள் (பாஜக) கூறுகிறார்கள். ஆனால், நாடாளுமன்றத்தில் நான் பேசும்போது எனது மைக்கை அணைத்துவிடுகிறார்கள். என்னைப் பேசவே அனுமதிப்பதில்லை.

நரேந்திர மோடியுடன் 5 நிமிஷம் நேருக்குநேர் விவாதம் நடத்தினால், அவர் தேச துரோகி என்பதையும், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுபவர் என்பதையும் நிரூபித்துவிடுவேன் என்றார்.

தொடர்ந்து கடந்த 2022-இல் சுட்டுக் கொல்லப்பட்ட பிரபல பஞ்சாப் பாடகர் சித்து மூஸேவாலா குறித்துப் பேசிய ராகுல், 'சில ஆண்டுகளுக்கு முன்பு சித்து மூஸேவாலா என்னைச் சந்தித்தார். என்னைக் கவர்ந்த இளைஞராக இருந்தார். காங்கிரஸில் இணைய விரும்புகிறார் என்றும் என்னிடம் தெரிவித்தனர். திறமையான இளைஞரான அவரை கட்சியில் இணைத்துக் கொண்டோம்.

பஞ்சாபின் குரல் அவரது பாடல்களில் ஒலித்தது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு நீக்கப்பட்ட பிறகு, பட்டப்பகலில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஒரே மகனை இழந்த அவரின் தந்தையின் வேதனைக் குரல் இப்போது எனது மனதை வருத்துகிறது' என்றார்.

பொறுப்பு நிலைநாட்டுதலை ஒரே நாடு, ஒரே தேர்தல் பாதிக்கும்

அமெரிக்க தேர்தல் முடிவு குறித்து காங்கிரஸ் விமர்சனம்

புது தில்லி, நவ.4: பொறுப்பு நிலைநாட்டுதலை ஒரே நாடு, ஒரே தேர்தல் பாதிக்கும் என்று அமெரிக்க நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தல் முடிவை சுட்டிக்காட்டி, மத்தியில் ஆளும் பிரதமர் மோடி அரசை காங்கிரஸ் கட்சி சாடியுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலில் அதிபர் டிரம்ப்பின் கட்சியான குடியரசு கட்சி தோல்வியை சந்தித்துள்ளது. எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று, நாடாளுமன்ற இரு அவைகளையும் கைப்பற்றியுள்ளது.

இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து காங்கிரஸ் கட்சியின் பொது செயலாளர் (ஊடக தொடர்பு பிரிவு) ஜெய்ராம் ரமேஷ் புதன்கிழமை வெளியிட்டுள்ள பதிவில், 'அமெரிக்க நாடாளுமன்ற இடைக்காலத்தேர்தல்முடிவு,அதிபர்டிரம்ப்புக்குஎதிரானஅதிர்ச்சியூட்டும் தீர்ப்பாகும். இந்தத் தேர்தல் முடிவுகள், பொறுப்பை நிலைநாட்டியுள்ளன.

ஆனால்,நமது நாட்டில்மோடி அரசால்முன்வைக்கப்படும்ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டமானது, அந்த பொறுப்பு நிலைநாட்டு தலை பாதிக்கச் செய்யும். அமெரிக்க நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தல் முடிவுகள், அந்த நாட்டில் அதிகார சமநிலையை மீட்டெடுத்துள்ளன. ஆனால் இந்தியாவில் கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் அந்த சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது' என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மற்றொரு பொதுச் செயலாளரான கே.சி. வேணுகோபாலும், அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவை முன்வைத்து மோடி அரசை சாடியுள்ளார். இதுகுறித்து தனது எக்ஸ் சமூகவலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'சர்வாதிகார போக்கை மக்களின் கூட்டு சக்தியால் எவ்வாறு தோற்கடிக்க முடியும் என்பதை மிகவும் உறுதியாக அமெரிக்க இடைக்காலத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. மக்கள் ஒன்றுபட்டால் எப்போதும் வெற்றி கிடைக்கும். இந்தியா ஒன்றுபட்டால்' என்று குறிப்பிட்டுள்ளார்.

புயல் பாதிப்பு: ஆந்திரத்துக்கு ரூ.4,500 கோடி உடனடி நிதி

மத்திய அரசுக்கு சந்திரபாபு நாயுடு கடிதம்

அமராவதி, நவ. 4: ஆந்திரத்தை ஒரே வாரத்தில் இரு புயல்கள் தாக்கியுள்ள நிலையில், மத்திய அரசு உடனடியாக ரூ.4,500 கோடி விடுவிக்க வேண்டும் என்று மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு கடிதம் எழுதியுள்ளார்.



வங்கக் கடலில் ஏற்பட்ட அர்னாப் மற்றும் முரசு புயல்கள் ஒரு வார இடைவெளியில் ஆந்திரம் வழியாகக் கரையைக் கடந்தன. இதனால், விளைநிலங்கள் பாதிப்பு, மின் விநியோகக் கட்டமைப்புகள், வீடுகள் சேதம், கால்நடைகள் இழப்பு உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இது தொடர்பாக மத்திய அரசிடம் நிதி கேட்டு சந்திரபாபு நாயுடு கடிதம் எழுதியுள்ளார். அதில், மிகக் கடுமையான அர்னாப் புயலால் ரூ.4,563 கோடி அளவுக்கும், அதைத் தொடர்ந்து தாக்கிய முரசு புயலால் ரூ.343 கோடி அளவுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசு உடனடி நிவாரணமாக ரூ.4,500 கோடி வழங்க வேண்டும்' என்று கோரியுள்ளார்.

பிரதமர் தொலைபேசியில் ஆலோசனை: இதனிடையே, புயல் பாதிப்புகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி, சந்திரபாபு நாயுடுவை புதன்கிழமை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாதிப்பு விவரங்களைக் கேட்டறிந்தார்.

அப்போது புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவும் சூழல் குறித்து சந்திரபாபு நாயுடு, பிரதமரிடம் விளக்கினார். குறிப்பாக, பலத்த மழை, புயல் காரணமாக விவசாயிகள் பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளதை எடுத்துரைத்தார்.

சாலைகள், மின்சாரக் கட்டமைப்புகள் உள்ளிட்டவையும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பகுதிகளை மீட்டெடுக்க மத்திய அரசு போதிய நிதியுதவியை வழங்க வேண்டும் என்றும் பிரதமரிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

முன்னதாக, புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சந்திரபாபு நாயுடு புதன்கிழமை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டார்.

சர்க்கரை விலை மீண்டும் உயர்வு

புது தில்லி, நவ. 4: தீபாவளி பண்டிகை நெருங்கியுள்ள நிலையில் சர்க்கரை விலை மீண்டும் உயர்ந்துள்ளது. சர்க்கரை விலை உயர்வைக் கட்டுக்குள் வைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், பண்டிகை கால தேவை அதிகரிப்பால் விலையும் உயர்ந்துள்ளது.

மத்திய நுகர்வோர் விவகாரத் துறை அமைச்சக புள்ளிவிவரத்தின்படி கடந்த மாதம் சர்க்கரை விலை ஒரு கிலோ ரூ.55.40-ஆக இருந்தது. தற்போது ஒரு கிலோ ரூ.59.50-ஆக அதிகரித்துவிட்டது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் சில்லறை விற்பனையில் ஒரு கிலோ ரூ.46.50 -ஆகவும், மொத்த விற்பனையில் ரூ.43.23 ஆகவும் இருந்தது. இந்த ஆண்டு 12 முதல் 13 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது.

தற்போது அதிகபட்சமாக கொல்கத்தாவில் ஒரு கிலோ சர்க்கரை ரூ.65-க்கு விற்பனையாகிறது. மும்பையில் ரூ.64, தில்லியில் ரூ.61-ஆக உள்ளது. கடந்த ஆண்டில் இந்த நகரங்களில் ஒரு கிலோ சர்க்கரை ரூ.45 முதல் ரூ.50 வரை இருந்தது.

கரும்பு விளைச்சல் குறைவு, மேற்காசியப் போரால் ஏற்பட்ட சர்வதேச விநியோகச் சிக்கல்கள், பதுக்கல், பண்டிகை கால தேவை முன்னெப்போதும் இல்லாத அதிரித்தது உள்ளிட்ட காரணங்களால் சர்க்கரை விலை உச்சத்தை எட்டியுள்ளது.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911

மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002 மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார். இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத